அக்டோபர் இதழ்-திறனுய்வு

மாணவர்

கி. பி. 2000ல் பூச்செண்டு சந்திர
மண்டல கடைகளில் விற்க வழி சொல்கிருர்:

ந. வே. சங்கரன், I பி. ஏ., சென்னை கிறித்துவக் கல்லூரி.

# பூச்செண்டு அக்டோபர் இதழ் - திறனாய்வு

கி.பி 2000ல் பூச்செண்டு சந்திர மண்டல கடைகளில் விற்க வழி சொல்கிறார்: **மாணவர்** ந.வே. சங்கரன், I பி.ஏ., சென்னை கிறீத்துவக் கல்லூரி

முதற் பக்கத்திலேயே, பூச்செண்டு அழகாக அரசியல்வாதிகளைத் தாக்கியிருக்கிறது. பிறந்த நாள் விழாக்களின் போலித் தன்மையைக் கண்டித்ததுப் பாராட்டத்தக்கது. ஆனால், வ. உ. சி. யைப் பாராட்டும் பூச்செண்டு, ஒட்டு மொத்தமாய் அக்டோபர் தொடர் நாடகம் எனக் குறிப்பிட்டு, அண்ணல் காந்திஜியையும் இகழ்வது தவறே. முதற் பக்கத்தில் மகாத்மாவை இகழ்ந்திருப்பதாய் தோன்றிய கருத்தை, மூன்றாம் பக்கத் தலையங்கம் மாற்றி அமைப்பதாயிருந்த போதும், தொடர் நாடகங்களில் அக்டோபரைக் குறிப்பிட்டதன் மறைபொருள் சரிவரப் புரியவில்லை.

''கிருஷ்ணர் 'இக்'ல் இருக்கிறார்'' எனத் திரையுலகப்போலி வாழ்வைக் கண்டு, 'வேதனைச் சிரிப்பு சிரிக்கும் பூச்செண்டு, அதே திரையுலகின் இயக்குநர் ஸ்ரீதருக்கு விழா எடுப்பது (பக்கம்-9.) நிச்சயம் பொருத்தமல்ல.

கேள்வி-பதில் பகுதியில் சுவையே இல்லை. அளித்த விடைகளுள், 5-ஆம் கேள்விக்கான 2-ஆம் பதிலே பொருத்தமானதாயும், சிறப்பாயும் உள்ளது. இன்னும் சத்தோடும் சாரத்தோடும் விடைகள் அமைய வேண்டும்.

'காற்றிலே வரும் தமிழ்க்குரல் பேட்டி உண்மையில், பாராட்டத்தக்கதாகவும், படித்து ரசிக்கும் படியாகவும் உள்ளது. பேட்டியில் உள்ள சில விஷயங்கள், பழையனவே.

கற்பனைக் கூடத்தில், 'இந்தி யாவில் கம்யூனிசம் வந்து விட்டால்' நடப்பதை நவின்ற நண்பர், துவக்கத்தில் அருமையாய் ஆரம்பித்து, இறுதியில் சுவையின்றி, இடையிடையே அர்த்தமற்ற (கலப்படத் தீர்வு) விஷயங்களையும் அமைத்து முடித்துவிட் டார். சற்றே கவனம் செலுத்தியிருந்தாலும், கருத்துள்ளதாக அமைந்திருக்கும்.

சண்முகம் அவர்களின் கவிதையில் சற்று பொருள் இருந்த போதும், கம்யூனிச மனப்பான்மை தட்டுப்படுவது ஏனோ? நண்பர் செல்லப்பன் உளந்தளராது உருவாக்கிய கவிதை முழுமையாய்ப் பொலிகிறது. கவிதைகளின் துள்ளல் இனிமை, துவளும், நெஞ்சிற்கு துடிப்பூட்டுவதாயுள்ளது.

'சுரதா'வின் கவித் திறமையை வியந்த அன்பர், வழக்கம்போல் பாராட்டி விட்டுவிடாமல், "'சுரதா'வின் உவமைகளாலேயே அவரை உணர்த்தியுள்ளது விரும்பத்தக்கது. அன்பர் தண்டபாணி அடிக்கடி, 'பாருங்கள்', 'படியுங்கள்' என எழுதுவதை தவிர்த்திருக்கலாம்.

அட்டைப் படம் அழகான போதிலும், 24-ஆம் பக்க விளக்கம் அர்த்தமுள்ளதாய் அமையவில்லை. ஏதோ ஒப்பிற்கு எழுதியது போன்று தோன்றுகிறது.

'தேர்தல்', 'அரசியல் பூஜ்யமும் சூன்யமும்'--துணுக்கும் கட்டுரையும் மிக அருமை. 'தேர்தல்' கருத்துக்கள், வேதனைப்பட வைக்கையில், 'பூஜ்யமும் சூன்யமும்' சிந்திக்க வைக்கின்றன. ''நீ பெரும் தியாகியடா!' கதையின் கரு மிகச் சாதாரணமே. சுந்தரமே சந்திராவைக் கெடுத்தவனாய் இருப்பான் என முதலில் ஊகித்தேன். ஆனால் பக்கம் 45 லேயே கதை முடிந்தது போலிருப்பது கண்டு, 'நம் ஊகம் தவறு!' என்று எண்ணினேன்.

மேலும், தொடர்ந்த கதை நான் சரியென மெய்ப்பித்துவிட்டது. நடைமட்டும் சுமார்.

ஆங்காங்கு வெளியிடப்பட்பட்டுள்ள துணுக்குகள் சிறந்திருந்தபோதும், அவற்றுள் சிலவற்றின் நடை 'கல்கண்டு' இதழைப் போன்றுள்ளது. (எ. கா:பக்கங்கள் -35, 36.). திரை விமரிசனத்தை இன்னும் திறம்பட எழுதலாம். பக்கங்கள் 51-52-ல் பட்டியல் ஒன்று தருவது மிகவும் அவசியமோ? ஆசிரியர் குழு பெயர்களை மட்டும் வெளியிட்டால் போதுமே!

ஆனால், பூச்செண்டின் முந்தைய இதழ்களோடு ஒப்பிடுகையில் இவ்விதழ் பரவாயில்லை.

குறை தவிர்க்க கதைகள் அதிகம் வேண்டும்! கவிதையில் எளிமை வேண்டும்!! உழைப்பு இன்னும் வேண்டும்!!! 'எமக்குள்ள நேரத்தில் இன்னும் என்ன தான் செய்ய?' எனக் கேட்கலாம்; உழைப்பைத் தந்துதவ, அநேக நண்பர்கள் முன்வார்கள்.

தக்காரை உடன் சேர்த்தால், தேவைகள் பூர்த்தியாகும். இதழும் மேலும் பொலிவுறும். அப்போதுதான், கி.பி. 2000ல் பூச்செண்டு சந்திர மண்டலக் கடைகளிலும் விற்கப்படுவதாய் காணும் கனவை நனவாக்க முடியும்.

பூச்செண்டு இதழ்
நவம்பர் 1970

---

முதல் பரிசு: **மாணவர்:** ந.வே.சங்கரன், சென்னை கிறித்துவக் கல்லூரி